தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

20.07.2013

**தண்ணீரை சேமிப்போம்...**

மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு எவ்வளவு முக்கியமோ... அதேபோல் குடிநீரும் முக்கியமானதுதான். பெருகிவரும் மக்கள்தொகைக்கேற்ப தற்போது குடிநீரின் தேவையும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. தமிழகத்தில் 31 மாவட்டங்களில் வறட்சி பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பெரும்பாலான நகரங்களில் குடிநீர் தலையாயப் பிரச்னையாக உருவெடுத்துள்ளது.

குறிப்பாக, மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம், நெல்லை, தூத்துக்குடி, குமரி ஆகிய மாவட்டங்களில் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதற்காக மக்கள் சாலையில் இறங்கி போராடும் நிலையும் ஏற்பட்டுள்ளது. மக்களுக்கு விநியோகம் செய்வதற்குத் தேவையான அளவு குடிநீர் கிடைப்பதில்லை.

இதற்கு முக்கியக் காரணம் நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததுதான். ஆற்றில் எத்தனை ஆழ்குழாய் கிணறு அமைத்தாலும், தண்ணீர் சரிவர கிடைப்பதில்லை.

இதுமட்டுமின்றி, வீட்டுக்குவீடு ஆழ்குழாய் அமைத்து தண்ணீரை உறிஞ்சி எடுக்கின்றனர். பெரும்பாலான தனியார் நிறுவனங்கள் தங்களின் தேவைக்காக ஒன்றுக்கும் மேற்பட்ட ஆழ்குழாய் கிணறு அமைத்து தண்ணீரை உறிஞ்சி எடுத்துவிடுகின்றனர். இதனால் பாதிக்கப்படுவது என்னவோ பொதுமக்கள்தான்.

இந்த குடிநீர்த் தட்டுப்பாட்டை போக்குவதற்காக, கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம், கூட்டுக் குடிநீர்த் திட்டம், வார்டுகள் தோறும் ஆழ்குழாய் கிணறு அமைப்பது போன்ற திட்டங்களை ஆட்சியாளர்கள் அறிவித்து, செயல்பாட்டுக்கு கொண்டு வந்தாலும், மக்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் குடிநீர்ப் பிரச்னையை தீர்க்க முடியாது.

இதற்காக, மக்களிடையே சில வழிமுறைகளை கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும். தண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்த வேண்டிய (கூடுதல்) விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

கடந்த அதிமுக ஆட்சியின்போது தீவிரப்படுத்தப்பட்ட மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை மீண்டும் தீவிரப்படுத்த வேண்டும். சாதாரண வீடு முதல் அடுக்கு மாடி குடியிருப்புகள் வரை கட்டும்போது அங்கு மழைநீர் சேகரிப்பு அமைப்பை உருவாக்குவதை உறுதி செய்யவேண்டும்.

மழைநீர் சேகரிப்பு அமைப்பை பயன்படுத்துவோருக்கு, குடிநீர்க் கட்டணத்தில் சலுகை அளித்து ஊக்கப்படுத்தலாம்.

மேலும், ஆறு, நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, மணல் எடுப்பதைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆறுகளில் தடுப்பணைகளைக் கட்டி தண்ணீரைத் தேக்கி வைக்கலாம்.

கோடையில் தண்ணீர் அதிகம் தேவைப்படாத பயிர்களைச் சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும். சொட்டுநீர் பாசனம் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

கிராமங்கள் தோறும் மரங்கள் நிறைந்த சோலைகளை அமைக்க முன்வர வேண்டும். கழிவுநீரை மறுசுழற்சி செய்து குடிநீர்த் தவிர, பிற பயன்பாடுகளுக்கு உபயோகிக்கலாம். அதற்கான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும்.

நம் முன்னோர் காலங்களில் வீதிகள்தோறும் மரங்கள் நிறைந்து காணப்பட்டன. இதனால் பருவ காலங்களில் தேவையான அளவைவிட, அதிகமாகவே மழை பெய்துவந்தது. இந்த மழை நீரைச் சேமித்து அதன்மூலம் விவசாயத்தையும், குடிநீர்ப் பிரச்னையையும் போக்கி வந்தனர்.

இதற்காக அவர்கள் ஏரி, குளம் கண்மாய் போன்றவற்றையும் உருவாக்கி, தண்ணீரைச் சேமித்து வந்தனர். ஆனால், சமீபகாலமாக, ஏரி, குளம், கண்மாய் போன்றவைகளெல்லாம் காணாமல் போய் குடியிருப்புகளாய் மாறிவரும் அவலம் ஏற்பட்டுள்ளது. ஆற்றில் ஊற்று தோண்டினாலும் தண்ணீர் வருவது அரிதாகவே உள்ளது.

மழைக் காலங்களில், ஒவ்வொரு மாநிலத்திலும் சராசரியாக மழைப் பொழிகிறது. இது மாநிலத்துக்கு மாநிலம் சற்று குறைவாகவும், கூடுதலாகவும் வாய்ப்பு உள்ளது.

இருந்தாலும், முக்கியமாக தமிழகத்தில் மழைநீரைச் சேமிப்பதில் கூடுதல் கவனம் செலுத்தத் தவறி விட்டனர் என்றே கூறலாம். இதனால் 50 சதவீதம் மழை நீர் வீணாகக் கடலில் போய் கலப்பதுடன், நிலத்தடி நீர்மட்டமும் குறைந்து கொண்டே போகிறது.

குடிநீர்ப் பிரச்னையை தீர்க்க ஆட்சியாளர்கள் தொலை நோக்குப் பார்வையுடன், காணாமல் போன பழைய நீராதாரங்களை ஆக்கிரமிப்பாளர்கள் பிடியிலிருந்து மீட்டு, தண்ணீர் சேமிப்புக்கு வழிவகை செய்தால்தான் தண்ணீருக்காக எந்த ஒரு மாநிலத்திடமும் கையேந்தி நிற்கவேண்டிய நிலை வராது.

நீரின் இன்றியமையாமையை உணர்ந்து ஒவ்வொருவரும் செயல்பட்டால் குடிநீர்த் தட்டுப்பாட்டிலிருந்து விடுபடலாம்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது**

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு தொடர்ந்து குறைந்து வருகிறது.

கர்நாடக மாநிலத்தில் மழையளவு குறைந்தது. அங்குள்ள அணைகளின் உபரிநீர் திறப்பும் வெகுவாகக் குறைக்கப்பட்டது. இதன் காரணமாக, கடந்த சில நாள்களாக மேட்டூர் அணைக்கான நீர்வரத்து தொடர்ந்து குறைந்து வருகிறது.
வெள்ளிக்கிழமை நீர்வரத்து நொடிக்கு 13,598 கன அடியாகக் குறைந்தது. குடிநீர்த் தேவைக்காக அணையிலிருந்து நொடிக்கு 3,633 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. நீர் இருப்பு 36.36 டி.எம்.சியாக இருந்தது.

**சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களில் சனிக்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழையின் தாக்கமாக மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிக்கு அருகில் உள்ள தமிழக மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக கோவை, நீலகிரி, திருநெல்வேலி, தேனி உள்ளிட்ட இடங்களில் உள்ள அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

இதைத் தவிர வெப்பச் சலனம் காரணமாக மாநிலத்தின் பிற மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்கிறது.

கோவை மாவட்டம் சின்னக் கல்லாறு, வால்பாறை, நீலகிரி, பெரியாறு அணை, காஞ்சிபுரம், வேலூர் உள்ளிட்ட இடங்களில் வியாழக்கிழமை மாலையிலிருந்து பலத்த மழை பெய்து வருகிறது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களில் சனிக்கிழமையன்று மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும்.

சென்னையைப் பொருத்த வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது.

வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):- நீலகிரி மாவட்டம் நடுவட்டம், வால்பாறை - 60, சின்னக் கல்லாறு - 50, நீலகிரி மாவட்டம் தேவலா, காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகம், கூடலூர் - 30.

**வெங்காயத்தை பதுக்கினால் நடவடிக்கை**

தில்லியில் வெங்காய பதுக்கலில் ஈடுபடும் வியாபாரிகள் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்கும் என்று உணவுத் துறை அமைச்சர் ஹாரூண் யூசுஃப் எச்சரித்துள்ளார்.

"தில்லியில் வெங்காயம் பற்றாக்குறை இல்லை. வரத்துக் குறைந்துள்ளதாகக் கூறி மொத்த விலையைவிட 5 முதல் 10 மடங்கு வரை கூடுதல் விலை வைத்து சில்லறை வியாபாரிகள் விற்கின்றனர். அதிகமாக விலை வைத்து விற்கும் சில்லறை வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்' என்று அவர் கூறினார்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு கிலோ ரூ. 20-க்கு விற்கப்பட்ட வெங்காயம், இப்போது ரூ. 40-க்கு விற்கப்படுகிறது.

அதையடுத்து, தில்லி உணவுத் துறை அமைச்சர் ஹாரூண் யூசுஃப், பழ மற்றும் காய்கறி மொத்த வியாபாரிகள் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் வெள்ளிக்கிழமை ஆலோசனை நடத்தினார்.

கூட்டத்தில் தில்லி வளர்ச்சித் துறை அமைச்சர் ராஜ் குமார் செளகான், உணவுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். பிறகு அமைச்சர் ஹாரூண் யூசுஃப் கூறியது:

தில்லியில் தினசரி 400 டன்கள் வெங்காயம் தேவை உள்ளது. ஆனால், 1,000 டன் கிடைக்கிறது. 2,000 டன்கள் வரை இருப்பு உள்ளது.

பழங்கள் மற்றும் காய்கறிகளின் உண்மையான விலையை மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில், செய்தித்தாள்களில் தினமும் அதுபற்றிய விவரங்களை

வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு ஆசாத்பூர் மொத்த பழங்கள், காய்கறிகள் மார்க்கெட்டை நடத்திவரும்

வேளாண் விளைபொருள் சந்தைக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

காய்கறி தொடர்பாக அன்றாடம் செய்தித்தாள்களில் வெளியாகும் விலை விவரம் குறித்து மக்கள் சரிபார்த்துக் கொள்ள வேண்டும் என்றார் ஹாரூண் யூசுஃப்.

ஆசாத்பூர் மண்டியின் வெங்காய வியாபாரிகள், விற்பனையாளர்கள் சங்கத் தலைவர் சுரேந்திர புதிராஜ் கூறுகையில், "மழை காரணமாக மத்தியப் பிரதேசத்தில் இருந்து வெங்காய வரத்து குறைந்துள்ளதால் மொத்த விலையில் ஒரு கிலோ வெங்காயம் ரூ. 22-லிருந்து ரூ. 27-ஆக உயர்ந்துள்ளது' என்றார்.

**பால் விலை உயர்வு குறித்து விரைவில் முடிவு**

கர்நாடகத்தில் பால் விலையை உயர்த்துவது குறித்து விரைவில் முடிவு எடுக்கப்படும் என்று, அந்த மாநில கால்நடைப் பராமரிப்பு மற்றும் சட்டத் துறை அமைச்சர் டி.பி.ஜெயசந்திரா தெரிவித்தார்.

கர்நாடக சட்டப்பேரவையில் வெள்ளிக்கிழமை கஜக உறுப்பினர் பி.எஸ்.எடியூரப்பா எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்து அவர் பேசியது:

கர்நாடக பால் கூட்டமைப்பு சார்பில் விற்பனை செய்யப்படும் நந்தினி பாலின் விலையை உயர்த்த முடிவு செய்துள்ளோம். விலை உயர்வின் அளவை இன்னும் முடிவு செய்யவில்லை. இதுகுறித்து விரைவில் முடிவெடுப்போம்.

கர்நாடக பால் கூட்டமைப்பை(கே.எம்.எஃப்.)பாதுகாக்கும் நோக்கில், பால் விலை உயர்த்தப்படுகிறது. பால் விலை உயர்வு தவிர்க்க முடியாதது.

பிற மாநிலங்களை ஒப்பிடுகையில், கர்நாடகத்தில் பால் விலை மிகவும் குறைவாக உள்ளது. ஒரு லிட்டர் பாலின் விலை கேரளத்தில் ரூ.33ஆகவும், ஆந்திரத்தில்

ரூ.32ஆகவும், தமிழ்நாட்டில் ரூ.27ஆகவும், மகாராஷ்டிரத்தில் ரூ.29ஆகவும், கோவாவில் ரூ.31ஆகவும், குஜராத்தில் ரூ.32ஆகவும் உள்ளது.

எனவே, கர்நாடகத்தில் பால் விலையை உயர்த்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஆனால், விலை உயர்வு விகிதம் குறித்து கர்நாடக பால் கூட்டமைப்பு அதிகாரிகளுடன் கலந்தாலோசித்த பின்னரே, முடிவு எடுக்கப்படும்.

கர்நாடக பால் கூட்டமைப்புக்கு உள்கட்டமைப்பு வசதிகளை அளிப்பதற்கு ரூ.300 கோடி தேவைப்படுகிறது. ஆகஸ்ட் 1-ஆம் தேதி முதல் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் இலவச பால் திட்டம் அமலாக்கப்படும்.

இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கும் அதிகளவில் பணம் தேவைப்படுகிறது. இதுபோன்ற காரணங்களால்தான் பால் விலை உயர்த்தப்படுகிறது என்றார் டி.பி.ஜெயசந்திரா.

முன்னதாக பாஜக உறுப்பினர் சி.டி.ரவி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து டி.பி.ஜெயசந்திரா பேசியது:

கர்நாடகத்தில் நாள்தோறும் 55 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், 35 லட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகிறது. 20 லட்சம் லிட்டர் பால் மீதமாகிறது. இதில், 10 லட்சம் லிட்டர் பால் பவுடராக்கப்படுகிறது. வெளிமாநிலங்களுக்கு பால் அனுப்புவதற்கு ஒரு லிட்டருக்கு ரூ.5லிருந்து ரூ.6 வரை செலவாகிறது.

இதனால், கர்நாடகத்தில் ஊட்டச்சத்து குறைவால் நலிவுற்றிருக்கும் மாணவர்களுக்கு மீதமாகும் பாலை இலவசமாக வழங்க முடிவு செய்தோம். இந்த திட்டத்திற்கு நாள்தோறும் 4 லட்சம் லிட்டர் பால் பயன்படுத்தப்படும் என்றார் அவர்.

**கார் சாகுபடிக்கு தண்ணீர் திறக்க விவசாயிகள் வலியுறுத்தல்**

தூத்துக்குடி மாவட்டத்தில் கார் சாகுபடிக்கு போதுமான தண்ணீரை பெற்றுத் தர அதிகாரிகள் முயற்சிக்க வேண்டும் என வியாழக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சியர் பொறுப்பு வகிக்கும் வருவாய் அலுவலர் இரா. முத்து தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது. வேளாண்மை இணை இயக்குநர் ரஞ்சித் சிங் தன்ராஜ், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கனகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டம் தொடங்கியதும், பெரும்பாலான விவசாயிகள் தங்களுக்கு வறட்சி நிவாரணத் தொகை சரியாக கிடைக்கவில்லை என்று புகார் தெரிவித்தனர். இதற்கு பதிலளித்துப் பேசிய வருவாய் அலுவலர் இரா.முத்து, வறட்சி நிவாரணத்தொகை வழங்குவதில் உள்ள பிரச்னை குறித்து தனியாக விசாரணைக் குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது என்றார். அவர்கள் அளிக்கும் தகவலின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

சில இடங்களில் விவசாய நிலங்களுக்குப் பதிலாக, தரிசு நிலங்களைக் காட்டி தங்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்கு அதிகாரிகள் நிவாரணத்தொகை வழங்கியுள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் குற்றம்சாட்டினர்.

மேலும், ஆண்டுதோறும் ஜூன் 1-ம் தேதி குறுவை சாகுபடிக்கு பாபநாசம் அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டிய அதிகாரிகள் இதுதொடர்பாக அரசுக்கு எந்தவித அறிக்கையும் தாக்கல் செய்யாமல் இருந்து வருவதாக விவசாயிகள் குற்றம்சாட்டினர். இதற்கு பதிலளித்த வருவாய் அலுவலர் இரா.முத்து கார் சாகுபடிக்கு உரிய முறையில் தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

தாமிரவருணி ஆற்றில் இருந்து திறந்துவிடப்பட்டுள்ள தண்ணீர் இதுவரை கோரம்பள்ளம் குளத்தை அடையாததால் விவசாயம் செய்ய முடியாத நிலை நீடித்து வருவதாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர். இன்னும் ஒருவாரத்துக்குள் கோரம்பள்ளம் குளத்துக்கு தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் உறுதியளித்தனர்.

**வேளாண் அலுவலர்களுக்கு பயிற்சி முகாம்**

தக்கலை வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கு பயிர் மதிப்பீட்டாய்வு புத்தாக்கப் பயிற்சி முகாம் நடைபெற்றது.

நாகர்கோவில் புள்ளியியல் உதவி இயக்குநர் எஸ். ராஜகோபால் தலைமை வகித்தார். தக்கலை வேளாண் உதவி இயக்குநர் எஸ். பாலசந்தர் முகாமைத் தொடக்கிவைத்துப் பேசினார்.

திருநெல்வேலி தேசிய மாதிரி ஆய்வுத் திட்டக் கண்காணிப்பாளர் செல்லம் பயிற்சியளித்தார். புள்ளியியல் அலுவலர்கள் மாலுக்முகம்மது, குமாரதாஸ் முன்னிலை வகித்தனர். வேளாண் அலுவலர்கள், துணை அலுவலர்கள், உதவி அலுவலர்கள், தோட்டக்கலை அலுவலர்கள், புள்ளியியல் அலுவலர்கள், புள்ளியியல் ஆய்வாளர்கள் உள்பட 60 பேர் பங்கேற்றனர்.

ஏற்பாடுகளை வட்டார புள்ளியியல் ஆய்வாளர்கள் ஜெயகீதா, பென்லா, ரமணி ஆகியோர் செய்தனர். முகாம் குறித்து நாகர்கோவில் புள்ளியியல் உதவி இயக்குநர் எஸ். ராஜகோபால் கூறியதாவது: தமிழகத்தில் நெல், சோளம், கம்பு, ராகி, திணை, கரும்பு, உளுந்து, பாசிப்பயறு, வாழை, மரவள்ளி போன்ற முக்கியமான பயிர்களுக்கு பயிர் மதிப்பீட்டாய்வு, அறுவடை ஆய்வுகள் நடத்தப்பட்டு மாவட்ட, மாநில அளவில் உணவு உற்பத்தி கணக்கிடப்படுகிறது.

முக்கிய பயிர்களின் சராசரி மகசூல் விவரம் அறியவும், உள்ளீடு, உற்பத்தி விகிதாசாரம் அறியம் பயிர் மதிப்பீட்டாய்வு பயன்படுகிறது. தேசிய வேளாண்

காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நெல், கம்பு, வாழை, மரவள்ளி போன்ற பயிர்களின் மகசூல், உத்தரவாத மகசூலுக்கு குறைவாக விளைச்சல் கிடைக்கப்பெறும் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கத் தேவையான விவரங்கள் இந்த ஆய்வின் மூலம் மதிப்பிடப்படுகிறது என்றார் அவர்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 74.54 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 74.54 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 16,409 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 2,999 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது**

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு தொடர்ந்து குறைந்து வருகிறது.

கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி அணை நிரம்பியதால், அணையின் பாதுகாப்பு கருதி உபரிநீர் வெளியேற்றப்படுகிறது. இதன் காரணமாக, மேட்டூர் அணைக்கு ஜூன் 25-ஆம் தேதி முதல் நீர்வரத்து அதிகரித்து வந்தது. அப்போது 15.51 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து, வெள்ளிக்கிழமை 74.14 அடியாக உயர்ந்தது.

இந்த நிலையில், கர்நாடக மாநிலத்தில் மழையளவு குறைந்தது. அங்குள்ள அணைகளின் உபரிநீர் திறப்பும் வெகுவாகக் குறைக்கப்பட்டது. இதன் காரணமாக, கடந்த சில நாள்களாக மேட்டூர் அணைக்கான நீர்வரத்து தொடர்ந்து குறைந்து வருகிறது.

வெள்ளிக்கிழமை நீர்வரத்து நொடிக்கு 13,598 கன அடியாகக் குறைந்தது. குடிநீர்த் தேவைக்காக அணையிலிருந்து நொடிக்கு 3,633 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. நீர் இருப்பு 36.36 டி.எம்.சியாக இருந்தது.

**தருமபுரியில் மழை**

தருமபுரியில் வெள்ளிக்கிழமை மாலையில் மழை பெய்ததால் இதமான சூழல் நிலவியது.

தருமபுரி மாவட்டம் முழுவதும் கடந்த சில நாள்களாக 100 டிகிரிக்கும் அதிகமாக வெயில் வாட்டி வந்தது. இந்த நிலையில், வெள்ளிக்கிழமை மாலையில் திடீரென சுமார் அரை மணி நேரம் மழை பெய்தது. இதனால், இதமான தட்பவெப்ப நிலை காணப்பட்டதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**ஒகேனக்கல் திட்டத்தால் வறட்சியிலும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாது!**

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கு புளோரைடு பாதிப்பில் இருந்து விமோசனம் கிடைக்கும் வகையில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டதன் மூலம் வறட்சிக் காலத்திலும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பே இல்லை எனக் கூறப்படுகிறது.

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் நிலத்தடி நீரில் லிட்டருக்கு 1.5 மி.கிராம் அளவை விட புளோரைடு பாதிப்பு அதிகம் உள்ளது. இந்த நீரைப் பருகுவதால் மூட்டு, முதுகெலும்பு, கை,கால் வளைதல், முடக்கு வாதம் போன்ற எலும்பு நோயும், பல்கள் கறைபடிதல் மற்றும் எலும்பு தொடர்பில்லாத நோய்ப் பாதிப்புக்கு ஆளாகி வந்தனர். இதோடு மட்டுமன்றி வறட்சிக் காலங்களில் கடும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டதால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.
இதனையடுத்து, 2036ஆம் ஆண்டு வரையில் இவ்விரு மாவட்டங்களில் வசிக்கும் மக்கள்தொகை கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு, ரூ.1,928.80 கோடியில்

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டப் பணி கடந்த 2010ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

29.80 லட்சம் மக்களுக்கு பயன்: இரு மாவட்டங்களிலும் வசிக்கும் 29.80 லட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் திட்டம் முடிக்கப்பட்டு, கடந்த மே மாதம் 29ஆம் தேதி தமிழக முதல்வர் ஜெயலலிதாவால் காணொலிக் காட்சி மூலம் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. நீர் சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திகரித்து, வீடுகளுக்கு தரமான குடிநீர் விநியோகிக்கப்படுவதால் வரவேற்பு கிடைத்துள்ளது.

இருப்பினும், ஒகேனக்கல் குடிநீர்த் திட்டப் பணிகள் 80 சதம்தான் நிறைவடைந்துள்ளன. தருமபுரி மாவட்டத்தில் சில கிராமப் பகுதிகள் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் போச்சம்பள்ளி, ஊத்தங்கரை உள்ளிட்ட சில பகுதிகளில் இன்னும் குடிநீர்க் குழாய் பதிக்கப்படவில்லை. இந்தப் பகுதிகளில் விரைந்து பணிகளை முடித்து குடிநீர் விநியோகிக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

அதேபோல கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் நகராட்சியில் மொத்தமுள்ள 45 வார்டுகளில் இன்னும் 25 வார்டுகளில் உள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

இரண்டு மாவட்டங்களில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் இந்தத் திட்டம் சென்றடைய வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

குடிநீர்த் தட்டுப்பாடு அறவே நீங்கும்: நிகழாண்டில் இரண்டு மாவட்டங்களிலும் கடும் வறட்சி நிலவிய போதும், ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தின் மூலம் போதுமான அளவில் வீடுகளுக்கு குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இத்திட்டம் முழுமை பெற்று முழுவதும் பயன்பாட்டுக்கு வந்து விட்டால், எந்தவொரு சூழலிலும் குடிநீர்த் தட்டுப்பாட்டிற்கு வாய்ப்பே இருக்காது என்று அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

ஆரணியை அடுத்த முள்ளண்டிரம் கே.கே.தோப்பில் உழவர் பயிற்சி நிலையம் சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது.

இப்பயிற்சிக்கு ஆரணி வேளாண்மை உதவி இயக்குநர் வே.சத்தியமூர்த்தி தலைமை தாங்கினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஆ.சதீஷ்குமார் வரவேற்றார். உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் எலிசபத் மேரி, முள்ளண்டிரம் பகுதி வேளாண் அலுவலர் பவித்ராதேவி ஆகியோர் விவசாயிகளுக்கு விதை நேர்த்தி, மண் மாதிரி சேகரிப்பு உள்ளிட்ட பயிற்சிகளை அளித்தனர்.

அட்மா குழு உறுப்பினர் தமிழ்பாரதி, முன்னோடி விவசாயி பாண்டியன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**உழவர் குழுவுக்கு ரூ.15 லட்சம் வேளாண் இயந்திரங்கள்**

வேலூர் மாவட்டத்தில் 16 இளம் விவசாயிகளைக் கொண்ட உழவர் குழு பதிவு செய்யப்பட்டு, அக்குழுவுக்கு ரூ.15 லட்சம் மதிப்பில் 12 வேளாண் இயந்திரங்களை ஆட்சியர் பொ.சங்கர் வெள்ளிக்கிழமை வழங்கினார்.

நவீன வேளாண் இயந்திரங்களின் பயன்பாட்டை அதிகரிக்கவும், ஒப்பந்த அடிப்படையில் விவசாயப் பணிகளுக்கு இவற்றை குறைந்த வாடகையில் பயன்படுத்திக் கொள்ளவும் வாய்ப்பு அளிக்கும் வகையில் உழவர் குழுக்கள் அமைக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து மாவட்டத்தில் 16 இளம் விவசாயிகளைக் கொண்ட ஒரு உழவர் குழு உருவாக்கப்பட்டு, "பசுமை வேளாண் இயந்திரமயமாக்கல் சங்கம்' என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குழுவில் இடம்பெற்றுள்ள 16 உறுப்பினர்களுக்கு வேளாண் பொறியியல் துறை சார்பில் நவீன வேளாண் இயந்திரங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பயிற்சி 6 மாதம் நடத்தப்பட்டது. இதில் சிறந்த முறையில் பயிற்சி பெற்ற இவர்களை 4 உபகுழுக்களாக பிரித்து 100 சதவீத மானியத்தில் 4 பவர் டில்லர்கள், 4 களையெடுக்கும் கருவிகள், 4 நெல் நாற்று நடும் இயந்திரங்கள் ஆகியன ரூ.15 லட்சம் மதிப்பில் வழங்கப்பட்டன.

இதில் வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் எம்.எஸ்.இன்பநாதன், வேளாண்மை இணை இயக்குநர் ஆர்.ஜெயசுந்தர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்**

நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் உதகையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் தலைமை வகித்தார். இதில் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் உள்பட பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

இதில் விவசாய சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட 28 கோரிக்கை மனுக்கள் மீது விவாதிக்கப்பட்டு, அது தொடர்பான விளக்கங்கள் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டன.

படகு இல்லம் அமைந்துள்ள ஏரியில் ஆகாயத் தாமரைகள் அகற்றப்பட்டு வருவதாகவும், காரட் கழுவும் இயந்திரத்திற்கு சாதாரணக் கட்டணம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

தேனீ வளர்ப்புக்கு தோட்டக்கலைத் துறை மூலமாக 50 சதவீத மானியத்தில் திட்டம் செயல்படுத்தப்படும். வெள்ளைப்பூண்டில் புதிய ரகமான பானை

வெள்ளைப்பூண்டு என்ற ரகம் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின் மூலமாக விரைவில் அறிமுகப்படுத்தப்படும் உள்பட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக விவாதிக்கப்பட்டன.

**குன்னூரில் மழை**

குன்னூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளிக்கிழமை பரவலாக மழை பெய்ததால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

சில மாதங்களாக குன்னூரில் வறட்சி நிலவி வந்தது. இதனால், ரேலியா அணை வறண்டு, தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த இரண்டு நாள்களாக தூரல் மழை பெய்து வந்தது.

இதைத்தொடர்ந்து வெள்ளிக்கிழமை காலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. பிற்பகலில் பரவலாக மழை பெய்தது; இந்த மழை விவசாயத்துக்கு ஏற்றதாக இருந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**மழைக் காலத்தில்உயிர்த் தண்ணீர் தேவையாம்!**

பொதுவாக, வறட்சிக் காலத்தில் விவசாயப் பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டால் தான் அவற்றைக் காப்பாற்றுவதற்காக அணைகளில் இருந்து உயிர்த் தண்ணீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை விடுப்பார்கள். ஆனால், கடந்த ஒரு மாதமாக பருவமழை நல்ல முறையில் பெய்து வரும் நேரத்தில் ஆழியாறு புதிய ஆயக்கட்டுப் பாசனத்துக்காக உயிர்த் தண்ணீர் கேட்டு பொதுப்பணித் துறை அமைச்சரிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளது அதிகாரிகளிடம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆழியாறு அணையில் இருந்து புதிய மற்றும் பழைய ஆயக்கட்டுப் பாசனத்தில் உள்ள சுமார் 44 ஆயிரம் ஏக்கர் பாசனத்துக்காக ஒவ்வோராண்டும் தண்ணீர் திறக்கப்படும். அணையில் நீர் இருப்பைப் பொறுத்துத் தண்ணீர் திறக்கப்படும்.

மொத்தமுள்ள 44 ஆயிரம் ஏக்கரும் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒரு ஆண்டில் 22 ஆயிரம் ஏக்கரும் அடுத்த ஆண்டில் 22 ஆயிரம் ஏக்கர் நிலங்களும் பாசனம் பெறும்.

பாலாறு படுகையில் பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டத்தில் தண்ணீர் திறக்கும்போதே ஆழியாறு அணையில் இருந்தும் தண்ணீர் திறக்க அரசாணை பெறப்படும். இச் சூழ்நிலையில் கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் பாலாறு படுகையில் பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டத்தின்கீழ் இருந்த பகுதிகளில் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த தென்னை மரங்கள் காய்ந்துவிட்டன. இதனால், விவசாயிகள் தண்ணீரை விலைக்கு வாங்கித் தென்னை மரங்களுக்கு ஊற்றி வாழ்நாள் பயிரைக் காக்க முயற்சி மேற்கொண்டனர்.

பொதுவாக, வறட்சிக் காலத்தில் வாடும் பயிரைக் காப்பாற்றுவதற்காக உயிர்த் தண்ணீர் திறக்குமாறு விவசாயிகள் கேட்பார்கள். அதற்கேற்ப சில நாள்கள் மட்டும் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும். கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் அனைத்து இடங்களிலும் வறட்சி தாண்டவமாடியது. ஆனால், இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் பருவமழை துவங்கியது. 1993-க்குப் பின் இந்த ஆண்டுதான் சோலையாறு அணை ஜூன் மாதத்தில் நிரம்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆழியாறு பகுதியைப் பொறுத்தவரையில் கடந்த ஜூன் மற்றும் ஜூலையில் நல்ல மழை பெய்துள்ளது.

இதனால், விவசாயப் பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இந் நிலையில், வால்பாறை பகுதியில் உள்ள சோலையாறு அணையைப் பார்வையிட வந்த பொதுப்பணித் துறை அமைச்சர் கே.வி.இராமலிங்கத்திடம், ஆழியாறு புதிய ஆயக்கட்டுப் பாசனத்துக்கு உயிர்த் தண்ணீர் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிற பகுதிகளை ஒப்பிடும்போது ஆழியாறு அணையில் இருந்து பாசனம் பெறும் புதிய மற்றும் பழைய ஆயக்கட்டுப் பகுதியில் நல்ல மழை பெய்துள்ளது. இப் பகுதிக்கு உயிர்த் தண்ணீர் விட வேண்டும் என்று விவசாயிகள் விடுத்த கோரிக்கை பொதுப்பணித் துறையினரை மட்டுமில்லாமல் பரம்பிக்குளம்-ஆழியாறு பாசன விவசாயிகளையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

உயிர்த் தண்ணீர் திறக்கப்பட்டால் கிணறு மற்றும் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்திக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் ஆளும்கட்சி விவசாயிகள் சிலர், அமைச்சரிடம்  கோரிக்கை விடுத்துள்ளனர். அவ்வாறு திறக்கப்பட்டால் தவறான முன்னுதாரணமாக ஆகிவிடும் என்றும் பொதுப்பணித் துறையினர் அமைச்சரிடம் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

ஆழியாறு அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் கேரளத்துக்குத்தான் செல்லும். ஆனால், அங்கு செல்லும் தண்ணீர், தமிழகம் தர வேண்டிய தண்ணீர்க் கணக்கில் வராது என்றும் பொதுப்பணித் துறையினரிடம் கருத்து நிலவுகிறது. அங்கு கொடுத்தால் உண்மையில் பாதிக்கப்பட்டுள்ள பி.ஏ.பி. திட்ட விவசாயிகளுக்குத் தண்ணீர் குறையும் வாய்ப்புள்ளது என்றும் பொதுப்பணித் துறையினர் தெரிவித்தனர்.

**சோலையாறில் 62 மி.மீ. மழை**

சோலையாறு அணைப் பகுதியில் வெள்ளிக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 62 மி.மீ. மழை பெய்துள்ளது.

பிற இடங்களில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.ல்): பரம்பிக்குளம் 48, ஆழியாறு 8.4, திருமூர்த்தி 3.5, அப்பர் நீராறு 52, லோயர் நீராறு 39, வேட்டைக்காரன்புதூர் 14, மாக்கினாம்பட்டி 15.6, மணக்கடவு 21.2, நல்லூர் 7, நவமலை 4.3, சர்க்கார்பதி 17, தூணக்கடவு 17, பெருவாரிப்பள்ளம் 15, அப்பர் ஆழியாறு 4.3, காடம்பாறை 9, பொள்ளாச்சி 13, சின்கோனா 60.

**மீன் வளர்ப்பு தொழிலுக்கு இலவச மின்சாரம்**

விவசாயத்துடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படும் மீன் வளர்ப்புத் தொழிலுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் என சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வே. ராஜாராமன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆட்சியர் வெளியிட்டுள்ள அறிக்கை: மீன் வளர்ப்புத் தொழிலானது விவசாயிகளுக்கு அதிக வருமானத்தையும், வேலை வாய்ப்பையும் தரக்கூடியது. விவசாயிகள் தங்களது வயல்களில் உள்ள பண்ணைக் குட்டைகள் மற்றும் ஒருங்கிணைந்த மீன் குட்டைகளில் மீன்களை வளர்க்கலாம்.

மீன் வளர்ப்புத் தொழில், விவசாயத்தை விட அதிக வருமானம் தரக்கூடியதாக உள்ளது. மீன் விதை, தீவனம் மற்றும் நீர் இறைப்பதற்கு மின்சாரம் ஆகியவை முக்கியம்.

மீன், இறால் வளர்ப்போர் மின் கட்டணமாக 500 யூனிட் வரையிலான மின்சாரத்துக்கு, ஒரு யூனிட்டுக்கு ரூ. 3.50-ம், 500 யூனிட்டுக்கும் அதிகமாக மின் நுகர்வு உள்ளபோது ஒரு யூனிட்டுக்கு ரூ. 4 என்ற அளவிலும் கட்டணம் செலுத்தப்படுகிறது.

இது வரை வர்த்தக வரி இனத்தின் கீழ் மின் கட்டணம் செலுத்தி வந்த மீன், இறால் வளர்ப்போர், வேளாண் தொழிலுடன் ஒருங்கிணைந்த மீன் வளர்ப்புத் தொழில் மேற்கொள்ளும் போது இலவச மின்சாரம் வழங்கப்படும்.

அரசின் இந்த சலுகையைப் பயன்படுத்தி, சிவகங்கை மாவட்டத்தில் மீன் வளர்ப்பினை விவசாயிகள் மேற்கொண்டு வருமானத்தை அதிகரிக்கலாம் என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**தொடர் சாரல் மழை: கம்பம் பள்ளத்தாக்கு மானாவாரி கடலை விவசாயிகள் மகிழ்ச்சி**

தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் மானாவாரி நிலங்களில் கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், தொடர் சாரல் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் கம்பம், கூடலூர் அருகிலுள்ள ஏகலூத்து, கல்லுடைச்சான் பாறை, கன்னிமார்புலம், பெருமாள் கோவில்புலம், கழுதைமேடு, வாத்து படுகை, புதுரோடு மற்றும் பளியன்குடி பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் விவசாயிகள் அதிகளவில் கடலை சாகுபடி செய்துள்ளனர்.

கடந்த ஆண்டு, சித்திரை முதல் வாரத்தில் பயிரிடப்பட்ட நிலக்கடலைப் பயிர், களைகள் எடுக்கப்பட்டு, பூச்சிக் கொல்லி மருந்துகள் தெளித்து, பக்குவப்படுத்தி, பாதுகாப்பாக விவசாயிகள் வைத்திருந்தனர். ஆனால், தென்மேற்குப் பருவமழை பொய்த்ததால், விவசாயிகள் பெரிய அளவில் பாதிப்புக்குள்ளாயினர்.

இந்தாண்டு, தென்மேற்குப் பருவமழை கடந்த ஒரு மாதமாக பெய்து வருகிறது. இதனால், மானாவாரி நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள நிலக்கடலை பயிர்கள் நன்கு செழித்து வளரத் தொடங்கியுள்ளன.

சாரல் மழையினால் செடிகளில் உள்ள புளுக்களும் அழியத் தொடங்கியுள்ளன. எனவே, கம்பம் பள்ளத்தாக்கு மானாவாரி கடலை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**வறட்சி நிவாரணத் திட்ட கணக்கெடுப்பு**

தேனி மாவட்டத்தில், வறட்சி நிவாரணம் வழங்கும் திட்டத்தின் கீழ் விவசாய நிலங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்பை அதிகாரிகள் கணக்கெடுப்பு செய்ததில் ஏற்பட்ட குளறுபடியால், பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளும் அரசு நிவாரண உதவி பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று பெரியகுளம் சட்டப் பேரவை உறுப்பினர் ஏ.லாசர்  வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியது: அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 33ஆவது மாநாடு கடலூரில் ஜூலை 24ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை நடைபெறுகிறது. மாநாட்டை முன்னிட்டு தேனியில் இருந்து "கே.பி. ஜானகியம்மாள் ஜோதி' பயணம் சனிக்கிழமை (ஜூலை 20) நடைபெறுகிறது.

மாவட்டத்தில் கடந்த ஆண்டு வறட்சியால் 70 ஆயிரம் ஏக்கர் புன்செய் நிலங்களில் மகசூல் இழப்பு மற்றும் பயிர் சேதம் ஏற்பட்டது. 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் உள்ள இருபோக சாகுபடி நிலங்களில், 12 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் முதல் போக சாகுபடி நடைபெறவில்லை. வறட்சியால் பாதிக்கப்பட்ட 3,000 விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்கக்கோரி விவசாயிகள் சங்கம் சார்பில் வருவாய்த் துறை அதிகாரிகளிடம் மனு அளித்துள்ளோம். இந்த நிலையில், சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களையும் வறட்சி பாதித்த மாவட்டங்களாக அரசு அறிவித்தது. வறட்சி பாதிப்பை பார்வையிட அமைச்சர் குழுவை நியமித்தது.

மாவட்டத்தில் வறட்சியால் ஏற்பட்ட பயிர் சேதத்தை வருவாய் துறை, விவசாயத் துறை மற்றும் தோட்டக் கலைத் துறை அதிகாரிகள் ஒருங்கிணைந்து மதிப்பீடு செய்யவில்லை. 289 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள நிலங்களில் மட்டுமே வறட்சியால் பயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளதாக அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. இதன்படி, 445 விவசாயிகளுக்கு மட்டும் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. வறட்சி பாதிப்பு குறித்த கணக்கெடுப்பில் குளறுபடி ஏற்பட்டுள்ளது குறித்தும், பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரண உதவி வழங்கக் கோரியும் வறட்சி பாதிப்பை பார்வையிட வந்திருந்த அமைச்சர்கள் குழுவிடம் மனு அளித்துள்ளோம்.

இந்தப் பிரச்னை குறித்தும், போடி வடக்குமலை, அகமலை, கொட்டகுடி பகுதிகளில் பல ஆண்டுகளாக பயிர் சாகுபடி செய்து வரும் விவசாயிகளுக்கு, ரயத்துவாரி முறையில் பட்டா வழங்கவும், வருசநாடு, கடமலைக்குண்டு பகுதியில் நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் அரசு கையகப்படுத்தி விவசாயிகளுக்கு வழங்கிய

நிலத்துக்கு பட்டா வழங்க வேண்டும், தேனியில் தேங்காய் கொள்முதல் நிலையம் தொடங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளையும் கடலூரில் நடைபெற உள்ள விவசாயிகள் சங்க மாநாட்டில் வலியுறுத்த உள்ளோம் என்றார்.

பேட்டியின்போது விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் டி.கண்ணன், செயலர் சுருளிநாதன், பொருளாளர் முருகன், மாநிலக் குழு உறுப்பினர் கே.ராஜப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

**நடப்பு பருவ நெல் சாகுபடிக்கு போதிய உரங்கள் இருப்பு : ஆட்சியர்**

நடப்பு பருவத்தில் நெல் சாகுபடிக்குத் தேவையான உரங்கள் இருப்பு உள்ளன என திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கொ. வீரராகவ ராவ் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: விவசாயத்திற்கு தேவையான முக்கிய இடுபொருளான உரங்கள் தாராளமாக கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் தமிழக அரசு ரு.150 கோடி டான்பெட் நிறுவனத்துக்கு வட்டியில்லா முன்பணம் வழங்கி

யுள்ளது.

இதைக்கொண்டு டான்பெட் நிறுவனம் டி.ஏ.பி. உரத்தை கொள்முதல் செய்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் முலம் விநியோகம் செய்து வருகிறது. இது தவிர தமிழக அரசு உரங்களின் மீதான 4 சதவீத மதிப்பு கூட்டு வரியிலிருந்து விலக்கு அளித்துள்ளது. இதன் முலம் 50 கிலோ முட்டை ஒன்றுக்கு ரூ.11 முதல் ரூ.52 வரை உரங்களின் விலை குறைந்துள்ளது.

தற்போது யூரியா உரங்கள் மட்டும் மிகக் குறைந்த விலையில் கிடைக்கிறது. எனவே விவசாயிகள் அதிக அளவில் யூரியா உரத்தை வாங்கி பயன்படுத்தி வருகிறார்கள்.

யூரியா போன்ற தழைச்சத்தை அளிக்கக்கூடிய உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவைவிட அதிக அளவில் பயன்படுத்தினால் பயிர்களின் வளர்ச்சி அதிகரித்து பூச்சி நோய் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும். இதன்முலம் மகசூல் குறைய வாய்ப்புள்ளது.

விவசாயிகளின் ஒருங்கிணைந்த கையேட்டில் உள்ள மண் வள பரிசோதனையின் அடிப்படையில் அல்லது பொது பரிந்துரையின் பேரில் உரங்களை விவசாயிகள் இட வேண்டும்.

விவசாயிகள் யூரியாவுடன் மணி மற்றும் சாம்பல் சத்து தாக்ககூடிய உரங்களையும் தவறாமல் பயன்படுத்த வேண்டும். மேலும் விவசாயிகளிடையே சிறிய அளவிலான யூரியா உரங்கள் அதிக பலனை தரககூடியது என்ற தவறான எண்ணம் நிலவி வருகிறது. குருணை வடிவிலான யூரியா மற்றும் சிறிய அளவிலான யூரியா இரண்டிலும் தழைச்சத்து 46 சதவீதம்தான் உள்ளது.

எனவே எந்த வடிவில் இருந்தாலும் எவ்வித சந்தேகமும் இன்றி யூரியா உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவினை மட்டும் இட்டு விவசாயிகள் பலனடையலாம்.

மேலும் உரங்களை வாங்கும் போது தவறாமல் அதற்குண்டான ரசீதை கேட்டுப் பெறவேண்டும். மூட்டையில் உள்ள விற்பனை விலையினை சரி பார்த்து வாங்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**ஆடிப்பட்டத்துக்கு விதைகளை வழங்க விவசாயிகள் கோரிக்கை**

தற்போது தொடங்கியுள்ள ஆடிப்பட்டத்துக்கு தேவையான வேளாண் விதைகளை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ் தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தில் விவசாயிகள் முன்வைத்த முக்கியக் கோரிக்கைகள்:

பெரியபாளையம் பகுதியில் நெல்கொள்முதல் மையம் திறப்பதாக மாவட்ட ஆட்சியர் உறுதியளித்தும், இதுவரை அதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, அங்கு நெல்கொள்முதல் மையத்தை உடனே திறக்க வேண்டும்.

பல ஆண்டுகளாக நிறுத்தப்பட்ட பொன்னேரி-சீமாவரம் பஸ்ஃஸ (தடம் எண்.டி.36) விவசாயிகள் நலன் கருதி, மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது ஆடிப்பட்டம் தொடங்கியுள்ளது. எனவே, விவசாயிகளுக்கு தேவையான விதைகளை மாவட்ட நிர்வாகம் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ் பேசியதாவது:

திருவள்ளூர் மாவட்டத்தில் 84 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவு நெல் சாகுபடி செய்ய வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில், 34 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் செம்மை நெல் சாகுபடி மூலம் பயிரிட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, குறைந்த நீர் மற்றும் குறைந்த முதலீட்டிலான திருந்திய செம்மை நெல் சாகுபடி செய்து விவசாயிகள் பயன்பெற வேண்டும்.

விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய ஆடிப்பட்டத்துக்கு தேவையான விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதனைஉரிய அலுவலரை அணுகி விவசாயிகள் பெற்றுக் கொள்ளலாம்.

வேளாண் துணை இயக்குநர் வி.வெங்கடசுப்பிரமணியன்,  ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை)கோ.சுப்பிரமணியன், கோட்டாட்சியர்கள்

ரா.அபிராமி, எம்.எஸ்.கலைவாணி, ஜெ.பார்த்திபன், பெ.சண்முகம் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

**ஆவின் மூலம் கால்நடைகளுக்கு இலவச மருத்துவம்: அமைச்சர்**

ஆவின் நிறுவனத்தின் மூலம் கால்நடைகளுக்கு இலவசமாக மருத்துவ வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று பால்வளத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்.

விழுப்புரம் ஆவின் பால் குளிரூட்டும் நிறுவனம் மற்றும் நிறுவனத்தின் உற்பத்தி செய்யப்படும் பால் பொருள்களை பால்வளத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆய்வு செய்தார். பின்னர் அவர் பால் குளிரூட்டும் நிறுவனத்தில் உள்ள கொதிகலன் பிரிவு, பால் பதனிடும் பிரிவு, குளிர்சாதனப் பிரிவு, பாலிதீன் பைகளில் அடைக்கும் பிரிவு, பால் உற்பத்தி பொருள்களான பால்கோவா, மற்றும் நெய் தயாரிக்கும் பிரிவு உள்ளிட்ட பிரிவுகளை ஒவ்வொன்றாக பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதன் பின்னர் அவர்கள் நிருபர்களிடம் கூறியது: கறவை பசுக்களின் பால் உற்பத்தியை பெருக்குவதற்காக ஆவின் நிறுவனத்தின் மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு மானிய விலையில் பசுந்தீவனம் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று ஆவின் நிறுவனத்தின் மூலம் கால்நடைகளுக்கு இலவசமாக மருத்துவ வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

விழுப்புரம் மாவட்டத்தில் 2012-13-ம் ஆண்டில் கறவை பசு வழங்கும் திட்டத்தின் கீழ் 1150 பயனாளிகளுக்கு கறவைப் பசு வழங்கப்பட்டுள்ளது. சென்னையில் சர்க்கரை நோயாளிகளுக்கான முழுமையான கொழுப்பு நீக்கப்பட்ட பால் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தமிழகத்தில் அதிக அளவில் ஆவின் பால்தான் விற்பனை செய்யப்படுகிறது என்றார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சியர் வா.சம்பத், கடலூர்-விழுப்புரம் மண்டல தலைவர் விஜயகுமார், மாநிலங்களவை உறுப்பினர் ரா.லட்சுமணன், ஆவின் பொது மேலாளர் சுந்தரேசன், நகர்மன்றத் தலைவர் ஜி.பாஸ்கரன், கூட்டுறவு பண்டக சாலை தலைவர் பசுபதி உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

**சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களில் சனிக்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழையின் தாக்கமாக மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிக்கு அருகில் உள்ள தமிழக மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக கோவை, நீலகிரி, திருநெல்வேலி, தேனி உள்ளிட்ட இடங்களில் உள்ள அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

இதைத் தவிர வெப்பச் சலனம் காரணமாக மாநிலத்தின் பிற மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்கிறது.

கோவை மாவட்டம் சின்னக் கல்லாறு, வால்பாறை, நீலகிரி, பெரியாறு அணை, காஞ்சிபுரம், வேலூர் உள்ளிட்ட இடங்களில் வியாழக்கிழமை மாலையிலிருந்து பலத்த மழை பெய்து வருகிறது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களில் சனிக்கிழமையன்று மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும்.

சென்னையைப் பொருத்த வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது.

வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):- நீலகிரி மாவட்டம் நடுவட்டம், வால்பாறை - 60, சின்னக் கல்லாறு - 50, நீலகிரி மாவட்டம் தேவலா, காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகம், கூடலூர் - 30.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**20.07.2013**

## கால்நடைகளுக்கு இலவச முகாமில் பரிசோதனை

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டியில் லயன்ஸ் கிளப், லியோ கிளப், கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் பஞ்சாயத்து சார்பில் மூன்று நாள் இலவச கால்நடை பாதுகாப்பு, பரிசோதனை, சிகிச்சை முகாம் நடந்தது.முகாமை லயன்ஸ் கிளப் துணைத்தலைவர் கைலாசநாதன் தலைமை வகித்து துவக்கி வைத்தார். கால்நடை மருத்துவர்கள் ராமலிங்கம், ராதிகா, சுரேந்திரன் உள்ளிட்ட அலுவலர்கள் ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகளுக்கு பரிசோதனை மேற்கொண்டனர்.முகாமில், சுற்றுவட்டாரத்திலுள்ள விட்டுக்கட்டி, பறம்பியம், மடப்புறம், ஆட்டூர், எழிலூர், குறும்பல் உள்ளிட்ட கிராமங்களில் விவசாயிகள் வளர்த்து வரும் ஆயிரத்து 22 ஆடுகள், 697 மாடுகள், 30 கோழிகளுக்கு பரிசோதனை நடத்தி, சிகிச்சை அளித்தனர்.

## நாகலாபுரத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி

தேனி:தோட்டக்கலை சிறப்பு கிராம திட்டத்தில், நாகலாபுரத்தில் விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. தோட்டக்கலை பயிர்களுக்கான திட்டங்கள், மானிய விவரங்கள் பற்றி அலுவலர்கள் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். மா அடர் நடவு, சொட்டுநீர் பாசனம், உதிரி மலர், கிழங்கு மலர், நிலப்போர்வை அமைத்தல், தேனீ வளர்ப்பு, மானியம், மண் பரிசோதனைகள் பற்றி பயிற்சிகள் அளிக்கப்பட்டது. புதிதாக புகுத்தப்பட்ட வாழை விவசாயிகளுக்கான முன்னேற்ற சங்கங்கள் பற்றிய முக்கியத்துவம், குழித்தட்டு செடி வளர்ப்பு பற்றி

விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இப்பயிற்சியின் போது தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த நான்காம் ஆண்டு மாணவிகள் கலைச்செல்வி, கலைவாணி, கற்பகம், கயல்விழி, கீர்த்தனா, கிருத்திகா, மகேஷ்வரி, நந்தினி, நட்சத்திரா கலந்து கொண்டனர்.

## சொட்டு நீருக்கு மானியம்

காரைக்குடி:கல்லல் ஒன்றியத்தில் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் கரும்பு, தென்னை, மக்காச்சோளம் பயறு சாகுபடி செய்ய உள்ள, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, சொட்டு நீர் பாசனம், ஹெக்டேருக்கு ரூ.43,816 முழு மானியத்தில் கொடுக்கப்பட உள்ளன. இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் விவசாயிகள், தாசில்தாரிடமிருந்து, சிறு, குறு விவசாயி சான்றிதழ், சாகுபடி செய்யப்பட்ட பயிருக்கான, அடங்கலை வி.ஏ.ஓ.,விடம் பெற்று, கல்லல் உதவி வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் பதிவு செய்திடலாம்.இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியம் வழங்கப்படும், என வேளாண் உதவி இயககுனர் கணேசன் தெரிவித்துள்ளார். மேலும் தொடர்புக்கு: 04565 274 515 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## வேளாண் பல்கலைமாணவர்கள் பயிற்சி

பவானி: வேளாண் பல்கலைக்கழகத்தில் படிக்கும் நான்காமாண்டு மாணவர்கள், கடந்த ஜுன், 5 முதல், கடந்த, 19ம் தேதி வரை பவானி வட்டார பகுதியில் உள்ள விவசாயிகள் தோட்டத்தில், ஊரக வேளாண் பணி அனுபவ பயிற்சி பெற்றனர்.கோவை வேளாண் பல்கலைக்கழக மாணவர்கள் அஸ்வத், மணிகண்டன், இந்துராம், ஜித்தின் ஜார்ஜ், குறளரசன், மணிகண்டன் ஆகியோர் அடங்கிய குழுவினர், ஊரக வேளாண் பணி அனுபவ பயிற்சியில், கடந்த, 45 நாட்களாக, பவானி வட்டார வேளாண் பகுதியில் ஈடுபட்டனர். விவசாயத்தில் உள்ள புதிய தொழில் நுட்பங்கள் பற்றிய தகவல்களை அறிந்தனர். வேளாண்

அலுவலக கிளை துறைகள், அவற்றின் செயல்பாடுகள், தோட்டக்கலைத்துறை, வேளாண் கிடங்குகளில் பயிற்சி மேற்கொண்டனர்.தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் போன்ற திட்டங்களின் நிலைமை குறித்து அறிந்தனர். மண், விதை மற்றும் பூச்சிக்கொல்லி பரிசோதனை நிலையங்கள், உயிர் உர ஆய்வுக்கூடம், விதை பதப்படுத்தும் மையம், உயிரி உரம் தயாரிக்கும் இடம் போன்றவற்றில் பயிற்சி பெற்றனர்.

## மேட்டூர் அணை உபரி நீரை சேலம் ஏரிகளுக்கு திருப்ப விவசாயிகள் கூட்டத்தில் வலியுறுத்தல்

சேலம்: "மேட்டூர் அணையில் இருந்து கால்வாய் மூலம் வெளியேற்றப்படும் உபரி நீரை, சேலத்தில் உள்ள ஏரிகளுக்கு திருப்பி விட வேண்டும் என்ற விவசாயிகளின், 60 ஆண்டு கோரிக்கையை உடனடியாக செயல்படுத்த வேண்டும்' என, விவசாயிகள் குறை தீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.சேலம், கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர் கூட்டம், கலெக்டர் மகரபூஷணம் தலைமையில் நடந்தது. டி.ஆர்.ஓ., செல்வராஜ் முன்னிலை வகித்தார்.விவசாயி பழனிமுருகன்: நெய்க்காரப்பட்டியில் சாலை பணி நடந்து வருகிறது. இதையடுத்து, திருமணிமுத்தாறு குறுக்கே கட்டப்பட்ட, "செக் டேம்' ஒரு பகுதி உடைத்து விடப்பட்டுள்ளது. இதனால், தண்ணீர் வீணாக பெருக்கெடுத்து ஓடுகிறது. திருமணிமுத்தாறில் கழிவு நீர் கலப்பதால், சுற்றுப்புற சுகாதார சீர் கேடு ஏற்படுகிறது. எனவே, உடைக்கப்பட்ட "செக் டேம்' ஒரு பகுதியை சீரமைக்க வேண்டும்.விவசாயி வையாபுரி: மத்திய அரசு மரபணு மாற்று விதை பயன்பாட்டுக்கு கொண்டு வருவதில், விவசாயிகளிடையே மாறுபட்ட கருத்து உள்ளது. எனவே, தமிழக அரசு விவசாயிகளிடம் கலந்துரையாடி, மரபணு மாற்று விதைகள் சம்பந்தமாக மத்திய அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். விவசாயி ஜெயராமன்: வசிஷ்ட நதியில் தண்ணீர் திறந்து விடுவதில் காலதாமதம்

செய்து வருகின்றனர். இதனால், தண்ணீரின்றி பயிர் வாடி வருகிறது. நிலத்தடி நீர் மட்டமும் குறைந்துள்ளது. எனவே, விவசாய பயன்பாட்டுக்கு வசிஷ்ட நதியில் தண்ணீர் திறந்து விட வேண்டும்.விவசாயி கோவிந்தராஜ்: தென்,மேற்கு பருவ மழையால் பூமியில் உஷ்ணம் மட்டுமே குறைந்துள்ளது. விவசாயிகளுக்கு பலன் அளிக்கவில்லை. தண்ணீரின்றி பாக்கு, தென்னை மரம் காய்ந்து வருகிறது. வறட்சி நிவாரணம் என்பது தற்காலிக தீர்வாக உள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய பகுதியை அமைச்சர் குழுவினர் பார்வையிட்டு, நிவாரண நிதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தற்போது, வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களை மறு ஆய்வு செய்துள்ளனர். இதற்கான வறட்சி நிவாரண தொகை எப்பொழுது கிடைக்கும் என்பது தெரியவில்லை. எனவே, விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண தொகையை விரைந்து வழங்கிட மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.விவசாயி சுந்தரம்: மேட்டூர் அணையால் சேலம் விவசாயிகளுக்கு எவ்வித பலனும் இல்லை. மேட்டூர் அணையில் இருந்து கால்வாய் மூலமாக வெளியேறும் தண்ணீரை, சேலம் ஏரிகள் மற்றும் நீர் நிலைகளுக்கு திருப்பிவிட வேண்டும் என விவசாயிகள், 60 ஆண்டுகளாக கோரிக்கை வைத்து வருகின்றனர்.இந்த கோரிக்கையை தமிழக அரசு நிறைவேற்றிட ஆய்வு செய்துள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. எனவே, இந்த திட்டத்தை மாவட்ட நிர்வாகம் விரைந்து நிறைவேற்றிட தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.விவசாயி சண்முகம்: தாதகாப்பட்டி உழவர் சந்தை காலை, 4 மணி முதல், 10.30 மணி வரை, இயங்குகிறது. முன்பு பகல், 11 மணி வரை உழவர் சந்தை செயல்பட்டது. தற்போது, 10.30 மணி வரை இயங்கும் உழவர் சந்தை நேரத்தை, 11 மணி வரை நீடிப்பு செய்ய வேண்டும்.விவசாயி சின்னசாமி: ஒகேனக்கல்லில் இருந்து வரும் உபரி நீரை, மணிமுத்தாறு, சரபங்கா நதிகளுடன் இணைத்திட, அரசு அறிவித்துள்ளது. இந்த திட்டத்தில் வசிஷ்ட நதியையும் இணைத்தால், இரண்டு தாலுக்காவை சேர்ந்த விவசாயிகள் பயன்

பெறுவார்கள்.கலெக்டர் மகரபூஷணம்: தமிழக அரசு மணிமுத்தாறு, சரபங்கா நதிகள் மட்டுமே திட்டத்தில் சேர்த்துள்ளது. திட்டம் ஆரம்பிக்கும் போது, அரசுக்கு பரிந்துரைத்து நடவடிக்கை எடுக்கலாம்.விவசாயி சின்னசாமி: அப்பமாசமுத்திரத்தில் தண்ணீர் பற்றாகுறை ஏற்பட்டுள்ள நிலையில், போர்வெல் அமைத்து, நிலத்தடி நீரை எடுத்து, தினமும், 20 லாரிகளுக்கு மேல் விற்பனை செய்கின்றனர். தண்ணீரை விற்பனை செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.கலெக்டர் மகரபூஷணம்: நிலத்தடி நீரை எடுக்க வேண்டாம் என்று கூற முடியாது. லாரிகளில் தண்ணீரை ஏற்றி சென்று விற்பனை செய்தால், நடவடிக்கை எடுக்கலாம். இவ்வாறு கூட்டத்தில் பேசினர்.

## கால்நடை சிறப்பு மருத்துவ திட்டமுகாம்: தமிழக அமைச்சர் பங்கேற்பு

பள்ளிபாளையம்: பள்ளிபாளையம் யூனியன், எலந்தக்குட்டை பஞ்சாயத்துக்கு உட்பட்ட வெள்ளிக்குட்டை கிராமத்தில், கால்நடை சிறப்பு மருத்துவ பாதுகாப்பு திட்ட முகாம், நேற்று நடந்தது.நாமக்கல் மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் தலைமை வகித்தார். ஆர்.டி.ஓ., கவிதா வரவேற்றார். யூனியன் சேர்மன் செந்தில் முன்னிலை வகித்தார். தமிழக தொழில் துறை அமைச்சர் தங்கமணி, முகாமை துவக்கி வைத்து பேசியதாவது:தமிழக முதல்வர், விவசாயிகள் மற்றும் ஏழை மக்கள் பொருளாதாரத்தால் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக, விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார். அதன்படி, எலந்தக்குட்டை பஞ்சாயத்தில், இதுவரை, 1,000 ஆடு வழங்கப்பட்டுள்ளது.அந்த ஆடு, குட்டி ஈன்று, தற்போது, 2,000மாக உயர்ந்துள்ளது. அதன் மூலம் விவசாயிகள் வாழ்வும் உயர்ந்துள்ளது. ஆடுகள் நோய் தாக்கி அழிந்து போகாமல் இருக்க வேண்டும். சிகிச்சைக்காக அலைய வேண்டாம் என்பதற்காக, ஒவ்வொரு மாதமும் இதுபோன்ற சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது.இவ்வாறு அவர் பேசினார்.முகாமில், கால்நடை சிறப்பு

சிகிச்சை, செயற்கை கருவூட்டல், சினை பரிசோதனை, மலடு நீக்கம், தடுப்பூசி போடுதல், குடற்புழு நீக்கம் போன்ற பல்வேறு சிகிச்சைகள் இலவசமாக அளிக்கப்பட்டது. தொடர்ந்து, தீவன பெருக்கம் கலந்தாய்வு கூட்டம், கோழிகளின் நோய் தடுப்பு முகாமும் நடந்தது.டி.சி.எம்.எஸ்., தலைவர் கந்தசாமி, கால்நடை மருத்துவர் டாக்டர் குழந்தைசாமி, உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்பபட பலர் பங்கேற்றனர்.

### கரீப் பருவ சாகுபடி பரப்பளவு அதிகரிப்பு

புதுடில்லி:நடப்பாண்டு கரீப் பருவத்தில் (ஜுன் -அக்.,), ஜுலை 19ம் தேதி நிலவரப்படி, பயிரிடப்பட்டுள்ள உணவு தானியங்களின் பரப்பளவு, 620.20 லட்சம் ஹெக்டேராக உயர்ந்து உள்ளது.இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில், 506.21 லட்சம் ஹெக்டேராக இருந்தது.

இதே காலத்தில், நெல் சாகுபடி பரப்பளவு, 139.42 லட்சம் ஹெக்டேரில் இருந்து, 154.85 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது.பருப்பு வகைகளின் சாகுபடி பரப்பளவு, 31.62 லட்சம் ஹெக்டேராகவும் ( 20.54), தானியங்களின் பரப்பளவு, 126.64 லட்சம் ஹெக்டேரா கவும் (95.43), எண்ணெய் வித்துக்கள், 149.82 லட்சம் ஹெக்டேராகவும் (108.81) அதிகரித்துள்ளது.

பருத்தி பயிரிடப்பட்ட பரப்பளவு, 100.55 லட்சம் ஹெக்டேராகவும் ( 83.74), சணல் பரப்பளவு 8.27 லட்சம் ஹெக்டேராகவும் (8.22) உயர்ந்துள்ளது.அதே சமயம், இதே காலத்தில், கரும்பு பயிரிடும் பரப்பளவு, 50.04 லட்சம் ஹெக்டேரில் இருந்து, 48.45 லட்சம் ஹெக்டேராக குறைந்து உள்ளது என, மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில், தெரிவிக்கப்பட்டு உள்ளது.

### ரூபாய் மதிப்பு சரிவால் முந்திரி விலை உயர்ந்தது

அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு சரிவடைந்து உள்ளதால், முந்திரி, பாதாம் உள்ளிட்ட உலர் பழங்களின் விலை அதிகரித்துள்ளது.

**முந்திரி கொட்டை:**கடந்த ஒரு மாத காலத்தில், நாட்டின் முக்கிய சந்தைகளில், முந்திரி பருப்பின் விலை, 17 சதவீத அளவிற்கும், பாதாம் விலை, 11 சதவீத அளவிற்கும் அதிகரித்துள்ளதாக, வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.இந்தியாவில், முந்திரி கொட்டைக்கான தேவை, 7 லட்சம் டன் என்ற அளவில் உள்ளது. இதில், 50 சதவீதம் முந்திரி கொட்டைகள், இறக்குமதி செய்யப்படுகின்றன.

பாதாம் பருப்பிற்கான தேவை, 70 ஆயிரம்டன் என்ற அளவில் உள்ளது. இது, முற்றிலுமாக, இறக்குமதி செய்யப்படுகிறது.இந்நிலையில், டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு, கடுமை யாக சரிவடைந்துள்ளதால், இறக்குமதி செலவினம் மிகவும் அதிகரித்து உள்ளது.

**ஏற்றுமதி:**இதையடுத்து, உள்நாட்டில் உள்ள முக்கிய சந்தைகளில், இவற்றின் விலை, படிப்படியாக அதிகரித்து வருகின்றன.உள்நாட்டு தேவை போக, சராசரியாக, ஆண்டுக்கு, 7,500 டன் முந்திரி ஏற்றுமதியாகிறது. சர்வதேச சந்தையில், ஒரு டன் முந்திரி கொட்டையின் விலை, 1,100 டாலரிலிருந்து, 800 டாலராக சரிவுஅடைந்துள்ளது.

ஆனால், டாலருக்கு எதிரான ரூபாயின் வெளிமதிப்பின் சரிவால், உள்நாட்டு சந்தையில், இதன் விலை உயர்ந்துள்ளதாக, இந்திய முந்திரி ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சிலின் முன்னாள் துணைத் தலைவர் கிரிதர் பிரபு தெரிவித்து உள்ளார். மங்களூர் சந்தையில், கடந்த ஒருமாத காலத்தில், முந்திரியின்விலை, 476 ரூபாயிலிருந்து, 529 ரூபாயாக (ஆலை விலை) அதிகரித்துள்ளது. ஏற்றுமதி தரம் வாய்ந்த மங்களூர், "டபிள்யூ 320' ரக முந்திரியின் விலை, 8.3 சதவீதம் அதிகரித்து, 423 ரூபாயிலிருந்து, 458 ரூபாயாக அதிகரித்துள்ளது.

**அமெரிக்கா:**டில்லி மற்றும் சண்டிகார் மொத்த விலை சந்தையில், பாதாம் விலை, கடந்த ஒரு மாத காலத்தில், 17 சதவீதம் அதிகரித்து, 470ல் இருந்து, 550 ரூபாயாக உயர்ந்துள்ளது. மும்பை சந்தையில் இதன் விலை, 505ல்இருந்து, 590 ஆக அதிகரித்துள்ளது.

அதேசமயம், சில்லரை விற்பனையில், ஒரு கிலோ முந்திரி, 750-800 ரூபாய்க்கும், பாதாம், 650-800 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றன.சர்வதேச அளவில், அமெரிக்காவில் பாதாம் அதிகளவில் உற்பத்தியாகிறது. ஆனால், கலிபோர்னியாவில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால், இதன் உற்பத்தி மிகவும் சரிவடைந்து உள்ளது. இதையடுத்து, பாதாம் அளிப்பு குறைந்து இதன் விலை அதிகரித்துள்ளது.

**தீபாவளி :**இந்தியாவில், வரும் தீபாவளி பண்டிகையின் போது, பாதாம் விலை, 600 ரூபாய் என்ற அளவில் இருக்கும் என, உலர் பழங்கள் விற்பனையில் ஈடுபட்டு வரும், மங்களூரைச் சேர்ந்த போரா "ரேந்திரா காமத் அன்ட் சன்ஸ் நிறுவனத்தின் பங்குதாரர் ராகுல் காமத் தெரிவித்தார்.இந்நிலையில், தற்போது, ரமலான் நோன்பு காலம் என்பதால், சில்லரை விற்பனையில் உலர் பழங்களின் விலை அதிகரித்துள்ளது என, வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

- பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து -

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**20.07.2013**

**மவளம் பாதுகாக்க இயற்கை உரங்களை பயன்படுத்த வேண்டும்**

ராமநாதபுரம்: மண்வளம் பாதுகாக்க இயற்கை உரங்களை பயன்படுத்த வேண்டும் என இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.ராமநாதபுரம் வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் கலெக்டர் நந்தகுமார் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் சிறப்பு அழைப்பாளராக இதில் பங்கேற்றார் கூட்டத்தில் அவர் பேசியதாவது: இயற்கை வேளாண்மை உத்திகளை பயன்படுத்தி விவசாயம் செய்வதன் மூலம் அதிக மகசூல் பெற லாம். ராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சியை தாங்கி வளரும் பாரம்பரிய மிக்க நெல் ரகங்களை பயிரிட வேண்டும். ரசாயன உரங் களை பயன்படுத்துவதால் மண்வளம் பாதிக்கப்பட்டு வருகிறது. மண்வளத்தை பாதுகாக்க விவசாயிகள் இயற்கை உரங்களை பயன்படுத்த வேண்டும்.தரமான விதைகளை விவசாயிகளே உற்பத்தி செய்ய வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் காய்கறிகள் பயிரிட வேண்டும். ராமநாதபுரம் மாவட்டத்திற்கு பெரும்பாலான காய்கறிகள் மதுரையில் இருந்து வருகின்றன. தற்போது இம்மாவட்டத்திலும் காய்கறிகள் பயிர் செய்வது அதிகரித்து வருகிறது. இயற்கை உரங்களை தயாரிப்பது எளிது. காலியான இடங்களில் மூலிகை செடிகளை பயிரிடலாம். மனிதர் களையும், மண் வளத்தையும் பாதிக்கக் கூடிய 67 வகை யான ரசாயன உரங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. இந்த உரங்கள் ராமநாதபுரம் மாவட்டத்தில் விற் பனை செய்யப்படுகிறதா என்பதை கண்காணிக்க வேண்டும்.

வறட்சி மாவட்டமான இங்கு காட்டு கருவேல மரங்கள் அதிகம் உள்ளன. இவற்றை அழிக்க வேண்டும் என்ற நிலைப்பாடு இருந்தாலும், வாழ்வாதாரத்திற்காக பலர் விறகாக, கரியாக இவற்றை பயன்படுத்தி வருகின்றனர். கருவேல மரங்களில் வைரம் பாய்ந்த மரங்களை மேஜை, கட்டில், சன்னல் செய்ய பயன்படுத்தலாம். இக்கட்டைகள் உளுத்து போய் மாவு போல கொட்டுவதை தடுக்க 10 அடிக்கு 4 அடி அகல தொட்டியில் தண்ணீர் நிரப்பி அதில் உப்பை கலக்க வேண்டும். இந்த கரைசலில் சுமார் 15 நாட்கள் ஊற வைத்தால் கருவேல கட்டைகள் மேலும் உறுதியாகும். இயற்கை விவசாய முறைகளை அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டும். போகலுீர் வட்டாரம் எட்டிவயல் கிராமத்தில் தரணி முருகேசன் பண்ணை நிலத்தில் இன்றும், நாளையும் விவசாயிகளுக்கு இயற்கை விவசாய முறைகள் குறித்து இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. 20 முதல் 40 வயதுக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு கலப்பு பண்ணை, இயற்கை வேளாண்மை, செலவில்லா விவசாயம், ஆடு,தேனி, மீன், காளான் வளர்ப்பு உள்ளிட்ட சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் டிஆர்ஓ விஸ்வநாதன், வேளாண்மை இணை இயக்குனர்(பொ) சவுந்தரராஜன், தொழில்நுட்ப வல்லுனர் ஏகாம்பரம் மற்றும் விவசாய பிரநிதிகள் கலந்து கொண்டனர்.

## வறட்சி பகுதியில் ஆய்வு செய்து 2 மாதமாகியும் தமிழகம் கேட்ட ரூ.19,665 கோடியை மத்திய அரசு இன்னும் வழங்கவில்லை



சென்னை : தமிழகம் கேட்ட வறட்சி நிதியான ரூ.19,665 கோடியை மத்திய அரசு இன்னும் வழங்கவில்லை என்று தமிழக அரசு உயர் அதிகாரி கூறினார்.
தமிழகத்தில் 2012ம் ஆண்டு பருவமழை குறைவாக பெய்தது.

இதனால் 31 மாவட்டங்களும் வறட்சி பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என்று தமிழக அரசு அறிவித்தது. நிவாரண உதவிகளையும் அறிவித்து அதன்படி வழங்கி வருகிறது.தமிழகத்தில் வறட்சி பகுதிகளை பார்வையிட்டு அறிக்கை அளிக்க, மத்திய சிறு விவசாயிகள் வேளாண் வணிக கூட்டமைப்பு நிர்வாக இயக்குனர் பிரவேஸ் சர்மா தலைமையில் 9 பேர் கொண்ட நிபுணர் குழுவினர் கடந்த மே 6ம் தேதி சென்னை வந்தனர். அந்த குழுவினர் 2 நாள் தமிழகத்தில் வறட்சி பாதித்த பகுதிகளை ஆய்வு செய்தனர்.

தமிழகத்தில் ஏற்பட்ட வறட்சியை சமாளிக்க ரூ.19,665 கோடி நிதி உதவியை மத்திய அரசு வழங்க வேண்டும் என்று நிபுணர் குழுவினரிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.
மத்திய குழு சென்னை வந்து ஆய்வு செய்து சுமார் இரண்டரை மாதங்கள் ஆகியும், தமிழகம் கேட்ட வறட்சி நிவாரண தொகையை மத்திய அரசு தரவில்லை.

இது குறித்து தமிழக வருவாய் துறை உயர் அதிகாரி ஒருவர் கூறும்போது, “டெல்லியில் இருந்து சென்னை வந்த மத்திய நிபுணர் குழுவிடம் தமிழகத்தில் 2012ம் ஆண்டு ஏற்பட்ட வறட்சியை சமாளிக்க ரூ.19,665 கோடி நிதி உதவி கோரப்பட்டது. அறிக்கை அளித்து இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகியும் இதுபற்றி எந்த தகவலும் வரவில்லை. தற்போது தமிழக அரசிடம் உள்ள நிதியில் இருந்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது." என்றார்.

**தமிழகம் புதுச்சேரியில் மேலும் 2 நாள் மழை நீடிக்கும்**

சென்னை : வங்கக் கடல் பகுதியில் வளி மண்டல மேல் அடுக்கில் ஏற்பட்டுள்ள காற்று சுழற்சி காரணமாக தமிழகம் புதுச்சேரியில் இரண்டு நாட்களுக்கு இடியுடன் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அரபிக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்தம் காரணமாக கேரளா, தெலங்கானா, தெற்கு கர்நாடகா பகுதிகளில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இந்நிலையில் மழை மறைவுப் பகுதியான தமிழகத்தில் வெப்ப சலனம் காரணமாக வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி ஏற்பட்டுள்ளது. இதனால், தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது.

நேற்று அதிகபட்சமாக தமிழகத்தில் நடுவட்டம், வால்பாறை 60 மிமீ, சின்னகல்லார் 50 மிமீ, தேவாலா, மதுராந்தகம், கூடலூர் 30 மிமீ, உதகமண்டலம், சோழவரம், திருவாலங்காடு, மாதவரம், திருவள்ளூர், செங்குன்றம், மாமல்லபுரம், பெரியாறு 20 மிமீ, சென்னை விமான நிலையம், கல்பாக்கம், தாம்பரம், கேளம்பாக்கம், செங்கல்பட்டு, உத்ரமேரூர், பொள்ளாச்சி, தாமரைப்பாக்கம், செம்பரம்பாக்கம், திருத்தணி, பூண்டி, சோளிங்கர், சென்னை டிஜிபி அலுவலகம், பேச்சிப்பாறை 10 மிமீ மழை பெய்துள்ளது.

சென்னை மற்றும் புறநகரில் நேற்று மதியத்தில் இருந்தே நல்ல மழை பெய் தது. தாம்பரம், வேளச்சேரி, பெரம்பூர், அடையாறு, மயிலாப்பூர், சைதாப்பேட்டை, அண்ணாநகர், போரூர், கோயம்பேடு உள்பட சென்னை நகரின் அனைத்து பகுதியிலும் மழை பெய்தது. பல இடங்களில் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இந்நிலையில், வங்கக்கடல் பகுதியில் வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி ஏற்பட்டுள்ளது. இதனால் தமிழகம், புதுச் சேரியில் இரண்டு நாட்களுக்கு இடியுடன் மழை பெய்யும். சென்னையில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். ஒரு சில இடங்களில் மாலை இரவு நேரங்களில் இடியுடன் மழை பெய்யும். தென் மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதை அடுத்து கேரளா, கர்நாடகா, ஆந்திர மாநிலங்களிலும் கனமழை பெய்யும். தென்மேற்கு பருவமழை காரணமாக ஆந்திர மாநிலம் கம்மம் மாவட்டத்தில் நேற்று ஒரே நாளில் 580 மிமீ மழை கொட்டித் தீர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**மஞ்சள் விலை ஒரே நாளில் குவிண்டாலுக்கு ரூ.700 சரிவு**

ஈரோடு : ஈரோடு அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த 2 தினங்களுக்கு முன்பு ஒரு குவிண்டால் விரலி அதிகபட்சமாக ரூ.6689க்கும், குறைந்தபட்சம் ரூ.5399க்கும், கிழங்கு மஞ்சள் அதிகபட்சமாக ரூ.5819க்கும், குறைந்தபட்சம் ரூ.4809க்கும் விற்பனையானது. இந்நிலையில், நேற்று முன் தினம் யாரும் எதிர்பார்க்காத அளவிற்கு மஞ்சள் விலை கிடுகிடுவென குறைந்தது.

அதிகபட்சமாக விரலி ரூ.5979க்கும், கிழங்கு ரூ.5799க்கும், குறைந்தபட்சமாக விரலி ரூ.4509க்கும், கிழங்கு ரூ.3600க்கும் விலை போனது. முந்தைய நாள் விலையுடன் விரலி மஞ்சள் விலையை ஒப்பிடும் போது ஏறத்தாழ ரூ.700 வரை விலை வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

இதேபோல செம்மாம்பாளையம் வெளி மார்க்கெட்டில் அதிகபட்சமாக விரலி ரூ.6384க்கும், கிழங்கு ரூ.5714க்கும் விலை போனது. நேற்று முன்தினத்துடன் ஒப்பிடும் போது குவிண்டாலுக்கு ரூ.200 வரை விலை சரிவடைந்திருந்தது. அதேசமயம் சேலம் பெருவெட்டு விரலி மஞ்சள் அதிகபட்சமாக ரூ.7464க்கும்,

குறைந்தபட்சம் ரூ.6204ஆகவும், கிழங்கு அதிகபட்சமாக ரூ.6117க்கும், குறைந்தபட்சம் ரூ.5689க்கும் விலை போனது.

மஞ்சள் விலை கடும் வீழ்ச்சியடைந்ததால் ஈரோடு அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 58 மூட்டையும்,வெளி மார்க்கட்டில் 521 மூட்டையும், ஈரோடு வேளாண் கூட்டுறவு விற்பனை நிலையத்தில் 67 மூட்டையும், கோபி வேளாண் கூட்டுறவு விற்பனை நிலையத்தில் 37 மூட்டை என மொத்தமே 683 மூட்டை மஞ்சள் மட்டுமே விற்பனையானது.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**20.07.2013**

**தேனி மாவட்டத்தில் சாரல் மழை எதிரொலியால் பூக்கள் விளைச்சல் பாதிப்பு விலை உயர்வு**

உப்புக்கோட்டை,

தேனி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் சாரல் மழையால் பூக்கள் விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் பூக்களின் விலை உயர்ந்து உள்ளது.

பூக்கள் சாகுபடி

தேனி மாவட்டம், சின்ன மனூர், கோட்டூர், சீலையம் பட்டி, உப்புக்கோட்டை, பாலார்பட்டி, பூதிப்புரம், அரப்படித்தேவன்பட்டி, வாழையாத்துப்பட்டி, மரிக்குண்டு, ஆண்டிப்பட்டி, சித்தார்பட்டி ஆகிய பகுதிகளில் பூக்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதியில் சாகுபடி செய்யப்படும் மல்லிகை, செண்டு, கோழிக்கொண்டை ஆகிய பூக்கள் திருச்சி, குமுளி, கொல்லம் ஆகிய பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

மேலும் மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளில் விளைச் சல் அடையும் பூக்கள் தேனி, ஆண்டிப்பட்டி, சீலையம் பட்டி ஆகிய ஊர்களில் உள்ள மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்பட்டு ஏலம் முறையில் விற்பனை செய்யப்படுகிறது. தேனி மாவட்டத்தில் கடந்த ஒரு மாத காலமாக பரவலான சாரல் மழை பெய்து வருகிறது. இதனால் பூக்களின் விளைச் சல் பாதிப்பு அடைந்துள் ளது.

விலை உயர்வு

விளைச்சல் குறைவு காரண மாக, போதிய பண்டிகைகள் மற்றும் சுபநிகழ்ச்சிகள் இல் லாத நிலையிலும் பூக்களின் விலை கனிசமான அளவிற்கு உயர்ந்து உள்ளன. தேனி பூ மார்க்கெட்டில் நேற்றைய பூக்களின் விலை நிலவரம் (கிலோ) வருமாறு:–

மல்லிகை பூ ரூ.200, கனகாம் பரம் ரூ.150, முல்லைப்பூ ரூ.200, பிச்சி பூ ரூ.250 வீதம் விற்பனை செய்யப்பட்டது. இது தவிர கோழிக்கொண்டை– ரூ.40, மருகு– ரூ.35, மரிக் கொழுந்து– ரூ.30, செண்டுப்பூ– ரூ.20, சம்பங்கி– ரூ.80–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

**ஊட்டியில் பேரிக்காய் சீசன் துவங்கியது**

ஊட்டி,

நீலகிரி மாவட்டத்தில் தற்போது வால் பேரிக் காய் சீசன் தொடங்கி உள்ளதால் பேரிக்காய் மரங்களில் கொத்து, கொத்தாக வால் பேரிக் காய்கள் காய்த்து குலுங்கு கின்றன.

பழங்கள்

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை, காய்கறிகள், கொய் மலர் சாகுபடிக்கு அடுத்த படியாக பழங்கள் அதிகளவு விளைவிக்கப்படு கிறது. இதில் குறிப்பாக ஊட்டி ஆப்பிள், ஆரஞ்சு, பிச்சீஸ், துரியன், மங்குஸ்தான், பிளம்ஸ், வாட் டர் புரூட், பெர்சிமன் உள் ளிட்ட பழ வகைகள் பிரபல மானவை.

இந்த பழங்கள் அறுவடை செய்யப்பட்டு சென்னை, கோவை, பெங்களூர், மைசூர் உள்ளிட்ட பல்வேறு இடங் களுக்கு ஏற்றுமதி செய்யப் படுகிறது. இந்த பழ உற்பத்தி மூலம் விவசாயிகளுக்கு ஓர ளவு வருமானம் கிடைத்து வருகிறது.

வால்பேரிக்காய் சீசன் தொடக்கம்

நீலகிரி மாவட்டத்தில் தற் போது வால்பேரிக்காய் பழ சீசன் தொடங்கி உள் ளது. தென் மேற்கு பருவமழை தற் போது பெய்து வரும் நிலையில் பேரிக்காய் மரங்களில் வால் பேரிக்காய் கொத்து, கொத்தாக காய்த்து குலுங்குகிறது.ஊட்டி, குன்னூர், கோத்தகிரி, கொலக் கம்பை உள்ளிட்ட பகுதிகளில் வால்பேரிக்காய் அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது.

தேயிலை தோட்டங்களின் நடுவே நடவு செய்யப் பட்டு உள்ள பேரிக்காய் மரங் களில் இருந்து பேரிக்காய் களை அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடு பட்டு உள்ளனர். இங்கு அறு வடை செய்யப் படும் பேரிக் காய்கள் மேட்டுப் பாளையம் மார்க்கெட்டிற்கு கொண்டு செல்லப்படுகிறது. மேலும், கேரளா உள்ளிட்ட மாநிலங் களில் உள்ள வியாபாரிகள் நேரிடையாக இங்கு வந்து வால்பேரிக்காய்களை கொள் முதல் செய்து வருகின்றனர்.

10 டன் பழங்கள் உற்பத்தி

தற்போது வால்பேரிக்காய் தரத்தை பொறுத்து கிலோ ரூ.40 முதல் ரூ.60 வரை விலை போகிறது. இந்த ஆண்டு பேரிக்காய் மகசூலும் அதிகரித்து உள்ள நிலையில் கட்டுப் படியான விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ள னர். இது குறித்து மாவட்ட தோட்டக்கலை துறை இணை இயக்குனர் (பொறுப்பு) மணி கூறியதாவது:-

மாவட்ட தோட்டக்கலை துறை சார்பில் குன்னூரில் பழப்பண்ணை உள்ளது.இங்கு ஆரஞ்சு, பிளம்ஸ், பிச்சீஸ், வால்பேரி உள்ளிட்ட பல்வேறு வகையான பழ மரங்கள் உள் ளன. இதன் மூலம் ஆண்டிற்கு சுமார் 10 டன் பழங்கள் உற் பத்தி செய்யப்பட்டு வருகி றது.

வால்பேரி ஜாம்

நீலகிரி மாவட்டத்தில் தற் போது வால்பேரிக்காய் சீசன் தொடங்கி உள்ளது. ஊட்டி, குன்னூர், கோத்தகிரி உள் ளிட்ட இடங்களில் வால் பேரி மரங்களில்

வால்பேரிக்காய் காய்த்து குலுங்குகின்றன. குன் னூர் பழப்பண்ணையில்விளையும் பழங்களை கொண்டு ஜாம் உற்பத்தி செய்யப் படு கிறது. வால்பேரிக்காய் சீசன் தொடங்கி உள்ள நிலையில் வால்பேரி ஜாம் உற்பத்தி தொடங்கியுள்ளது.

இதில் 300 கிராம் கொண்ட வால்பேரி ஜாம் ரூ.40-க்கு விற்பனை செய்யப்படுகிறது. கூட்டு பழ ஜாம் 300 கிராம் ரூ.90-க்கு விற்பனை செய்யப் பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**50 சதவீத மானிய விலையில் தக்கைப்பூண்டு விதை வினியோகம்**

மோகனூர்,

மோகனூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் விஜயராகவன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:- மோகனூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் தக்கைப் பூண்டு விதைகள் 50 சதவீத மானிய விலையில் விற்பனை செய்யப்படுகிறது. தக்கைப் பூண்டு விதையை 1 ஏக்கருக்கு 20 கிலோ வாங்கி விதைப்பு செய்து 45-வது நாள் பூ பூக்கும் தருணத்தில் மடக்கி உழவு செய்வதன் மூலம் அடுத்த பருவத்தில் பயிர் செய்யும் பயிருக்கு மண்ணில் தழைச்சத்து அதிகப்படுத்தி உரச்செலவை குறைக்க தக்கைப்பூண்டு விதையை பயன்படுத்தவும். விதை தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகி மானிய விண்ணப்பம் பெற்றுவாங்கி பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.